**ஊவாபரணகம பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**
-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 மார்ச் 21 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன் , அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 30 திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து ஊவாபரணகம பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதி திகதியில் உள்ளவாறு பௌதீக ரீதியாக காணப்படாத கொங்கிரீட் அச்சு கற்கள் தொகையொன்றின் பெறுமதி ஆகிய ரூபா 5,470,180 தொகை கணக்குகளில் காட்டிருந்தமையால் நடைமுறை சொத்துக்கள் அந்த பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிர்மாண வேலை கொடுத்தோர் ரூபா 67,550 தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தமையினால் அப்பெறுமதியினால் செலவுகள் மற்றும் பொறுப்புகள் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ஓய்வூதிய பெறுமதி ரூபா 36,596 தொகை பொறுப்புக்கள் என இனங்காணாமையினால் அப்பெறுமதியினால் செலவுகள் மற்றும் பொறுப்புகள் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) சபையினால் கடந்த ஆண்டின் போது காணிகள் உரித்தாக்குவதற்காக செலுத்தியிருந்த ரூபா 9,281,250 தொகை முற்பணத்தின் கீழ் பேரேட்டில் பதிவு செய்யப்படாமையால் அந்த பெறுமதியினால் சொத்துக்கள் குறைவாகக் காட்டப்பட்டிருந்த்து.

(உ) மீளாய்வாண்டின் போது சேர்வுப் பதிவேட்டில் இருந்து அகற்றப்பட்டிருந்த ரூபா 12,807 தொகை பெறுமதியான நூலகப் புத்தகங்களுக்காக கணக்குகளில் தேவையான சீராக்கல் மேற்கொள்ளப்படாமையால் அப்பெறுமதியனால் சொத்துக்கள் மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஊ) வருட இறுதியில் காணப்பட்ட ரூபா 35,050 இற்கான சேதனப் பசளை இருப்பு கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்காமையால் அப் பெறுமதியினால் நடைமுறை சொத்துக்கள் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட பலவீன வைப்புக்கள் ரூபா 106,368 தொகை மிகையாக கணக்கீடு செய்திருந்தமையால் அப்பெறுமதியினால் பொறுப்புகள் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஏ) முற்கொடுப்பனவு ரூபா 500,000 மிகையாக கணக்கீடு செய்திருந்தமையினால் நடைமுறைச் சொத்துக்கள் அதே தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

**1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 29,260,533 தொகைக்கான பெறவேண்டிய கணக்கு மீதியில் 02 வருடங்கள் நிலுவையாக காணப்பட்ட ரூபா 2,738 நிலுவை ஏக்கர் வரி, நிலுவை வாடகை ரூபா 412,565 தொகை, நீர் கட்டணம் ரூபா 1,239,275 தொகை, சந்தை வாடகை ரூபா 12,516 தொகை மற்றும் ஒரு வருட காலம் நிலுவையாக இருந்த வட்டி வருமானம் ரூபா 490,102 தொகை, மூலதன உதவி ரூபா 27,103,336 தொகை உம் அடங்கியிருந்தன.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 32,664,059 தொகை செலுத்த வேண்டிய மீதியில் 02 வருடங்களை உடைய நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் ரூபா 32,540,518 தொகை, ஒரு வருடத்தை உடைய பொது வழங்குனர் கடன் கொடுத்தோர் ரூபா 93,833 தொகை மற்றும் ஏனைய கடன் கொடுத்தோர் ரூபா 29,707 தொகை அடங்கியிருந்தது.

**1.3.3 இணக்கமின்மை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவம் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்பங்கள் கீழே காணப்படுகின்றன

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 49 | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் அங்கீகாரம் இல்லாத நிர்மாண வேலைகளை இனங்காண்பதற்காக கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| | (i) விதி 214 | கலஞ்சியப் பண்டங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | விதி 217 | சபைக்குச் சொந்தமான காணிகள் வேறாக்கி வரைபுகள் தயாரித்து காணப்பட வேண்டுமெனினும், வருடாந்த கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட ஆதனங்கள் தொடர்பாக காலத்திற்கு ஏற்ப அறிக்கை தயாரிக்கப்பட வேண்டுமெனினும் அவ்வாறு தயாரித்திருக்கவில்லை. |
| (iii) | விதி 218 | ஆண்டிற்கு ஒரு முறை சபையின் காணிகள் மற்றும் கட்டிடம் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கை நாளதுவரை ஆக்கி இருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது நகரசபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 6,967,366 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,889,000 தொகை ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் , சிட்டை இடப்பட்ட வருமானம் , சேகிரக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் , சிட்டை இடப்பட்ட வருமானம் , சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 2,269,540 | 2,812,020 | 2,674,918 | 756,897 | 1,819,540 | 2,294,621 | 1,599,210 | 1,284,895 |
| (ii) வாடகை | 1,451,000 | 873,832 | 929,649 | 503,278 | 11,930,000 | 849,834 | 836,155 | 323,631 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 700,000 | 40,000 | 980,280 | -- | 665,000 | -- | 654,170 | 17,650 |
| (iv) ஏனைய வருமானங்கள் | 11,584,000 | -- | 6,592,877 | 5,301,710 | 15,562,000 | -- | 10,078,348 | 5,105,606 |
| மொத்தம் | 16,004,540 | 3,725,852 | 11,177,724 | 6,561,885 | 29,976,540 | 3,144,455 | 13,167,883 | 6,731,782 |

#### 2.2.2 வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை

2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு மொத்த சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 3.7 மில்லியன் ஆக இருந்ததுடன், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 11.2

மில்லியன் ஆக இருந்தது. எவ்வாறாயினும் வருட இறுதியில் ரூபா 6.5 மில்லியன் வருமானம் ஒன்றினை சேகரிக்க வேண்டி இருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது நிலுவை வருமானம் 2.5 சதவீதத்தினால் குறைந்திருந்தது.

**2.2.3 வாடகை**

ரங்ஹவடிகம கடைகள் நிர்மாணிப்பதற்காக சபைக்கு சொந்தமான காணி பகுதியை வாடகை கொடுத்ததன் மூலம் வாடகையாளர்கள் 10 பேர்களிடம் 2000,2005 மற்றும் 2006 ஆண்டுகளின் போது அறவிடப்பட்டிருந்த ரூபா 121,000 தொகையினை குறிப்பிட்டு ஆண்டுகளுக்கான வருமானங்கள் என கணக்கீடு செய்யாமல் பலவின வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

**2.2.4 அனுமதிப் பத்திர கட்டணம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஆண்டிற்கான வர்த்தக அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய சபையின் அதிகார பிரதேசத்தை சேர்ந்த 14 வியாபாரங்களுக்காக அனுமதிப் பத்திரம் வழங்காமையால் ரூபா 14,000 இற்கான வருமானத்தை இழந்திருந்தது.

(ஆ) 2017 ஆண்டிற்கான வர்த்தக வரி ரூபா 9,900 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.5 ஏனைய வருமானங்கள்**

(அ) சபைக்குச் சொந்தமான பெக்கோ இயந்திரம், பாதை தகர்க்கும் இயந்திரம் மற்றும் நீர் பவுசர் என்பன வெளி தரப்பினருக்கு வாடகை அடிப்படையில் வழங்கியிருந்த போதிலும் அதற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 194,580 இற்கான தொகை 2017 திசெம்பர் 31 திகதி வரையும் அறவீடு செய்திருக்கவில்லை.

(ஆ) ஊவா மாகாண விவசாய, நீர்பாசன மற்றும் நன்னீர் கடற்தொழில் அலுவல்கள் அமைச்சில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 37,446 இற்கான வாகன வாடகை அறவீடு செய்திருக்கவில்லை.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 7,860,534 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 4,200,000 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல் , பொது மக்களின் சுகபோக வாழ்வு , வசதி மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கை திட்டம்**

ஆக்கப்பட்டுள்ள துணை விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளுக்காக 2017 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் பற்றி சபை அறிந்திருக்காமையால் அந்த குறிக்கோளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேச மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட கால திட்டங்கள் 2017 திசெம்பர் 31 திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 மனித வள முகாமைத்துவம்

சபையின் நூலக அதிபர் பதவி 01, தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி 01 மற்றும் சாரதி பதவி 01 என்பன வெற்றிடமாகக் காணப்பட்டன.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

கடந்த ஆண்டு லுணுவத்த நகர அபிவிருத்திக்காக ஹியூகோலானட் பெருந்தோட்டத்தில் இருந்து 7.5 ஏக்கர் அளவான காணியை உரித்தாக்குவதற்காக ரூபா 9,281,250 தொகை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தியிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு குறிப்பிட்ட அலுவல்களுக்கான காணி பிரதேச சபைக்கு உரித்தாக்குவதற்கு உரிய அலுவல்கள் எடுக்கப்பட்டிருக்கவில்லை

### 3.3.2 விளைவற்ற / குறைபயன்பாட்டு சொத்துக்கள்

கொங்கிரீட் கற்கள் உற்பத்தி செய்யும் திட்டத்திற்காக பயன்படுத்தியிருந்த ரூபா 268,613 தொகை பெறுமதியான 02 சீமெந்து கற்கள் உற்பத்தி செய்யும் இயந்திரங்கள் தொடர்புடைய ஏனைய பொறித் தொகுதிகள் 2015 ஆண்டு முதல் செயற்படாது காணப்பட்டது.

## 3.4 பெறுகை

### 3.4.1 பெறுகை திட்டம்

(i) சபையினால் மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

(ii) 2006 ஜனவரி 25 திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகை முகவராண்மையின் பெறுகை கோவையின் 3:9:1 இன் பிரகாரம் நேர்ஒப்பந்த முறையின் கீழ் செயற்திட்டங்கள் வழங்கும் போது சமூக அடிப்படை நிறுவனங்களை தெரிவு செய்யும் போது மூன்று உத்தியோகத்தர் கொண்ட ஒரு குழுவின் மூலம் தீர்மானிக்க வேண்டுமெனினும் 22 சமூக அடிப்படை அமைப்புக்கள் தெரிவு செய்யும் போது அவ்வாறு குழு ஒன்றின் மூலம் தீர்மானங்கள் எடுத்திருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் வருமானங்கள் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகள் உடன் இணக்கஞ் செய்த போது 06 வருமான விடயங்களில் 01 சதவீதம் 81 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் மற்றும் 07 செலவு விடயங்களில் 02 சதவீதம் முதல் 71 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளக கணக்காய்வு

மீளாய்வாண்டிற்கான உள்ளக கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு செயற்படுத்தல்

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு செயற்படுத்தியிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமை | குறைபாடு |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) வருமானங்கள் செலவுகள் மற்றும் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் சரியாக இனங்கண்டிருக்காமை.<br>(ii) கணக்கு பேரேட்டு மீதிகள் மற்றும் அட்டவணை மீதிகள் சரியாக இனங்காமை.<br>(iii) கணக்கு பதிவேடுகள் பேணப்படமை. |
| (ஆ) நிலையான சொத்துக்கள் | (i) காணி கட்டிடங்கள் மற்றும் சில நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்திருக்காமை மற்றும் இனங்கண்டிருக்காமை.<br>(ii) சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் காணப்படல்.<br>(iii) நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரை ஆக்கியிருக்காமை. |
| (இ) இருப்பு கட்டுபாடு | (i) இறுதி இருப்பு சரியாக கணித்திருக்காமை.<br>(ii) இருப்பு கட்டுபாட்டு பேரேடு பேணப்படாமை. |